THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, the 17th March 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Procurement of rice

*10 *S.N.Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the quantity of rice procured in the State in 1959 so far, from the rice-dealers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A quantity of 19,392 tons in terms of rice units has been procured in this State according to reports received up to 16th March 1959. Separate figures showing the quantity procured from rice dealers alone in this State are not readily available.

SRI N. K. PALANISAMI : ஸார், அறுவடை முடிந்த பிறகும், சர்க்கார் இந்த மாதிரி பர்மிட் ஸிஸ்டம்ஏற்படுத்தியபிறகும்2லட்சம் டன் பூராவையும் கொள்முதல் செய்ய முடியவில்லை என்பதை சர்க்கார் ஒத்துக்கொள்வார்களா? பூரா அளவையும் ப்ரோக்யூர் செய்ய வேறு ஏதாவது சர்க்காரிடம் திட்டம் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே இதைப்பற்றி விளக்கி யிருக்கிறேன். 2 லட்சம் டன்களை வாங்க முடியவில்லை என்று சர்க்கார் கருதவில்லை. வாங்க முடியவில்லை என்று சொல்லுவதற்கில்லை. மொத்தத்திலே 2 லட்சம் டன்கள் வாங்க வேண்டுமென்பது சர்க்காருடைய திட்டம். அவசரப்பட்டு எப்படியாவது வாங்கவேண்டுமென்பதில்லை. இனியும் வாங்கிக்கொள்ளலாம். வேண்டியதை எப்படியும் வாங்கிக் கொள்ளலாமென்றுதான் எண்ணுகிறது.

SRI M. JAGANNATHAN : Instead of procuring the rice from the rice-dealers, as such, may I know why the Government cannot procure the same from the ryots or the mirasdars directly?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I have already pointed out that the idea behind this programme is not to secure a certain quantity of rice for the requirements of the State, but effectively to enforce the price control order that has been promulgated.

SRI A. VEDARATHNAM : இந்த கொள் முதலில் தடை ஏற்படுத்திய பிறகும், நெல்லாக வெளி மாகாணங்களுக்குச் சென்று கொண்டிருந்ததற்குப் பதிலாக அரிசி இப்போது ஏராளமாக வெளியே சென்று கொண்டிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அப்படியானால், அதைத் தடுக்க ஏதேனும் முயற்சியுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரிசி ஓரளவுக்கு மற்ற மாகாணங்களுக்குப் போகிறது என்பது உண்மை. ஆனால் ஏராளமாகப் போகிறது—இது வரையில் போனதை விட அதிகமாகப் போகிறது—என்று கருதவில்லை. நெல் போகிறது என்றால் கணக்குத் தெரியாமல் போகிறது. அரிசியாகப் போனால் எத்தனை போகிறது என்று உணர்ந்து கொள்ளலாம்.

நம் மில்களிலிருந்து தான் போவதால் எத்தனைபோகிறது என்று உணர்ந்து கொள்ளலாம். நம் மில்களிலிருந்து அரிசியை நாமும் ஓரளவு வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலைமை இருக்கிறது.

Sri K. RAMACHANDRAN : ஸார், உபரி ஜில்லாக்களில் கொள்முதல் செய்வதுடன் கூட பற்றுக்குறை ஜில்லாக்களிலும் கொள் முதல் செய்வதால் அந்தப் பிரதேசங்களில் விலை ஏறிக்கொண்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால், பற்றுக்குறை பிரதேசங்களில் கொள்முதல் செய்வதை நிறுத்துவதற்கு உத்தரவு போடுவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நான் முன்பே கூறியது போல, நாம் இப்போது கொள்முதல் செய்வது, நாம் நிர்ணயித்திருக்கிற விலைப்படி மற்ற இடங்களில் விற்கவேண்டும் என்பதற்காக, உபரி ஜில்லாக்களிலும், பற்றுக்குறை ஜில்லாக்களிலும் கொள்முதல் செய்தால் தான் அதைப் பிரயோகிக்கக் கூடிய நிலைமை ஏற்படும்.

Sri S. LAZAR : ஸார், ப்ரொக்யூர்மெண்ட் ஆர்டர் அமுலுக்கு வந்த பிறகு சென்ற ஒரு வார காலமாக திருச்சி போன்ற இடங்களில் மார்க்கெட்டில் அரிசி கிடைக்கவில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ? ஒரு ஜில்லாவிலிருந்து மற்ற ஜில்லாக்களுக்குப் போகக்கூடாது என்ற உத்தரவை எடுத்துவிட சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த ஏற்பாடுகளை எதிர்த்து வருகிறது வியாபாரிகளுடைய கிளர்ச்சி. இதெல்லாம் வியாபாரிகள் சொல்லுகிற அபிப்பிராயங்கள்.

Sri A. A. RASHEED : May I know whether rice is procured only in surplus districts or in other districts also?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Rice is procured in all the districts, Sir.

Visits to Block offices by the Minister for Electricity

* 832 *Q.*—Sri T. VELUCHAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the defects noticed by the Hon. the Minister for Electricity when he visited the Alangulam Block office during August last year; and

(*b*) the steps taken to rectify the same?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A blockwise list of defects noticed by the Minister for Electricity has not been recorded. The Minister has gathered certain general impressions of the working of the Community Development Programme and the measures necessary for toning up the tempo of work. They are under examination by the Government.

* 833 *Q.*—Sri S. M. ANNAMALAI : கனம் முதல்மைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்ற 1958-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் மின்சார அமைச்சரவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் சமுதாய நலத் திட்டங்கள், தேசீய அபிவிருத்தி திட்டங்களின் அலுவலகங்களின் தஸ்தவேஜிகளைப் பார்வையிட்டாரா ?

(ஆ) எந்தெந்த அலுவலகங்கள் அவரால் பார்வையிடப்பட்டன ?.